*Volume No: 1* *Issue 1* *September 2016*

*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal of literary Explorations*
*ISSN:* 2456 - 4613
*IMIRJ, 1(1), 2016 [1-11]*

# கிருஷ்ணன் தூது



**த.மகேஸ்வரி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி
விருதுநகர்
E-mail: dmakesh88@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று தூது இலக்கியம். தமிழரிடையே தூது அனுப்புவது ஒரு வழக்கமாக இருந்தது. அரசர்கள் பகைவரிடத்தில் தூதனுப்புதலும், புலவர்கள் வள்ளல்களிடத்து தூதனுப்புதலும், தலைவியர் தலைவர்களிடத்து தூதனுப்புதலும் வழக்கமாக இருந்து வந்ததற்குப் பண்டைய இலக்கியங்கள் சான்றுகளாக அமைகின்றன. தமிழ்மொழியில் தூது என்னும் பொருள் அமைப்பைக் கொண்டு எழுந்த நூல்கள் ஏறத்தாழ அறுபதுக்கும் அதிகமாகவே காணப்படுகின்றன. இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் பாரதப்போரின்போது கிருஷ்ணன் தூது சென்ற சிறப்பம்சங்களைத் திருவள்ளுவர் கூறிய தூதின் பொருளமைதிகொண்டும், தூதின் இலக்கணவிதிப்படியும் எடுத்தியம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**தூது**

ஒருவர் தன்கருத்தை இன்னொருவருக்குத் தெரிவிக்கும் பொருட்டு தன் சார்பாளராக ஒரு நபரையோ அல்லது வேறொருபொருளையோ தூதாக அனுப்பியது ‘தூது’ எனும் சிற்றிலக்கியமாகும்.

**தூது–பெயர்க்காரணம்**

தூது விடுப்போர் பெயராலோ, தூது விடுக்கப்படுவோர் பெயராலோ தூதுநூல்கள் பெயர் பெறுவதில்லை. எந்தப்பொருள் தூதாக விடுக்கப்படுகின்றதோ, அப்பொருளின் பெயரையே நற்பெயராகக் கொண்டு வழங்கப்படுவது பெரும்பாலான வழக்கமாகும்(நெஞ்சைத்தூது விடுத்துப் பாடப்பெற்ற நூல் நெஞ்சுவிடு தூது). ஒரெபொருளை தூதுவிட்டுப் பாடப்படும் நூல்களில் பாட்டுடைத்தலைவன் பெயரைச் சார்ந்து வழங்கப்படும் ˙(சிவஞானபாலாய தேசிகர் மீது நெஞ்சுவிடுவது). பிரபந்தத்திரட்டில் கூறப்படும்

 IMIRJ, 1(1) ISSN: 2456 - 4613

பத்துப் பொருள்களையும் தன் குருநாதராகிய தானப்பாசாரியார் மீது தூது விடுத்து மீனாட்சிசுந்தரம்பிள்ளையால் பாடப்பெற்ற நூல் தானப்பாசாரியார் மீது தூது விடுவது என வகைப்படுத்தப்படுகிறது.

**தூது இலக்கியத்தின் பண்புகள்**

- எந்தப்பொருள் தூது சென்று வருமாறு வேண்டிப் பாடப்பட்டுள்ளதோ அந்தப்பொருளின் சிறப்பும் பெருமையும் உரைக்கப்படும்.
- எந்தத் தலைவனுக்குத் தூதனுப்பப்படுகிறதோ, அப்பாட்டுடைத் தலைவனின் சிறப்பும் பெருமையும் உரைக்கப்படும். அவனது தலச்சிறப்பு, பெருமைகள், தசாங்கம் முதலியவை இப்பகுதியில் உரைக்கப்படும்.
- தூது விடுக்கும் தலைவி, தலைவனைக் கண்டு மையலுற்ற செய்தி, தூது சென்றுவருமாறு தூது விடுக்கும் பொருளைக் கூறவேண்டும் பகுதி ஆகியன இடம்பெறும்.

**தூது விடுவதற்குரிய பொருள்கள்**

அன்னம்(எகினம்), மயில், கிளி, மேகம், நாகணவாய்ப்புள்(பூவை), பாங்கி(தோழி), குயில், நெஞ்சம், தென்றல், வண்டு(பிரமரம்) ஆகிய பத்தும் தூது விடுவதற்குரிய பொருள்கள் என்பதற்கு

**"எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை**
**சகிகுயினெஞ் சந்தென்றல் வண்டுதொகை பத்தை**
**வேறுவேறாகப் பிரித்து வித்தரித்துமாலை கொண்டன்பு**
**கூறிவா வென்றல் தூது"**

என்ற பிரபந்தப்பாடலும் சான்றாதாரமாகின்றது. பிற்காலத்தில் பணம், நெல், மான், துகில், வசனம், சவ்வாது, புகையிலை, விறலி, காக்கை, கழுதை, செருப்பு, தந்தி, பழையது, அன்பு, குருவி முதலான பல்வேறு பொருள்களையும் தூதுப் பொருள்களாக அமைத்துத் தூது இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

**அகம்,புறம் சார்ந்த தூது**

தூதுநூல்கள் பொருளின் அடிப்படையில் அகம் சாாந்த நூல்கள், புறம் சார்ந்த நூல்கள் என இரு வகையாகப் பகுக்கப்படுகின்றன.

தூது சங்ககாலம் தொடங்கி, 20-ஆம் நூற்றாண்டு வரை உள்ள பல்வேறு இலக்கியங்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியத் தொகைநூலான புறநானூற்றில் பிசிராந்தையார் தன் இனிய நண்பனாகிய கோப்பெருஞ்சோழனிடத்தில் அன்னச்சேவலைத் தூது விடுத்தார். அதியமான் என்னும் மன்னன் தன் பகையரசரான தொண்டைமானிடத்தில் ஔவையைத் தூது விடுத்தார் எனும் செய்தி புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இவை புறத்துறையில் அமைந்த தூது வகையாகும். புறப்பொருள் சார்ந்த தூது பற்றிய செய்திகளுக்குத் திருவள்ளுவர் 'தூது' என்னும் தனி அதிகாரத்தையே படைத்துள்ளார். தற்போதுள்ள நூல்களில் புறத்திணைத் தூது நூல்கள் அதிக அளவில் இல்லை.

தலைவன் தலைவியிடத்தும், தலைவி தலைவனிடத்தும் பிரிவுக் காலத்தில் தூதுவிடுதல் உண்டு.

**“தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாடினி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப”**
**(தொல்-கற்-நூ.91)**

என்ற நூற்பாவரிகளில் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் முதலான தூது செல்பவர்களைத் தொல்காப்பியர் வாயில்கள் எனும் பெயரால் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். களவுக் காலத்தில் தலைவன் பிரிவை ஆற்ற இயலாத தலைவி, தன் காமமிகுதியை அ∴றிணைப் பொருள்களிடத்தில் கூறித் தலைவனிடம் தூது சென்று வருமாறும் வேண்டுவாள். ஒருவர் கூறுவதை அறிந்து அதற்கேற்றபடி நடக்கும் உணர்வு அ∴றிணைப் பொருள்களுக்கு இல்லையெனினும், அச்சூழலில் அவற்றை முதன்மையாகக் கொண்டு தலைவி உரைப்பதாகக் கூறுகின்ற ஒரு மரபும் இருந்து வந்துள்ளது.

**திருக்குறள் தூது**

மக்கள்மாட்டு அன்புடையவனாயிருத்தலும், நற்குடியில் பிறந்திருத்தலும், வேந்து விரும்பும் பண்புடையவராயிருத்தலும் தூது செல்வானுக்கு உரிய இலக்கணமாகத் திருவள்ளுவர் வகுத்துள்ளார். அன்புடைமை, வினைக்கேற்ற அறிவுடைமை, வேற்றரசனிடம் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லும் செயல்திறம் இம்மூன்றும் இன்றியமையாத குணங்களாகும். வேற்று வேந்தனிடம் சொல்ல வேண்டிய செய்திகளைத் தொகுத்துச் சொல்லியும், அவ்வேந்தனுக்கு வெறுப்பான செய்திகளைக் கூறும்போது, கடுஞ்சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனம் மகிழச்சொல்லியும், தம் அரசனுக்கு நன்மை விளைவிப்பவனே உயர்ந்த தூதனாகக் கருதப்படுவான். தூதாகிய வினைக்குச் செல்பவனிடத்தில் இயற்கை அறிவு, கண்டார் விரும்பும் தோற்றப்பொலிவு, தெளிந்த கல்வியறிவு இம்மூன்றும் இருக்கவேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறுகிறார்.

**மகாபாரதம்**

மகாபாரதமும், இராமாயணமும் இதிகாச நூல்களாகும். ‘தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்’ என்ற நியதியைத் தெளிவுற எடுத்துக்காட்டும் மகாபாரதம் மனித வாழக்கைக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும். திருப்பாற்கடலில் துயிலும் ஆதி உலகின் முதன்மைப் பொருளான திருமால் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்து பாண்டவர்கள் மூலம் மாக்களாய் விளங்கிய துரியோதனாதியர்களை அழித்தான். பாரதப்போர் நடக்கும் முன் கிருஷ்ணன் பாண்டவர்களுக்காகக் கௌரவர்களிடம் தூது சென்ற விதத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம்.

### மூன்று தூதுகள்

'தூதிடையிட்ட வகையாயினும்' என்ற தொல்காப்பிய நூற்பா வழி புறத்துறைகளுள் இதுவும் ஒன்றாகுமென அறியலாம். போர் தொடங்குவதற்கு முன்னர் தூதர்களை அனுப்பி எதிரியின் கருத்தறிவது மரபு. மகாபாரதத்தில் உத்தியோகப்பருவத்தைத் தூதுப்பருவம் என்றும் கூறலாம். ஏனெனில் உத்தியோகப் பருவத்தில் அமைந்த உலூகன் தூது, சஞ்சயன் தூது, கிருஷ்ணன் தூது என்ற மூன்று பிரிவுகளும் தூது பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

### உலூகன் தூது

அமைதி நோக்கத்தோடு அனுப்ப பெற்ற முதல் தூது உலூகன் தூது. விராட மன்னனின் புரோகிதன் உலூகன். பாண்டவர்கள் வனவாசமும், அஞ்ஞாதவாசமும் முடித்த பின்னரும் துரியோதனன் நாடாளும் பொறுப்பைக் கொடுக்க மறுத்துவிட்டான். அதனால் கிருஷ்ணனின் அறிவுரைப்படி, உலூகமுனிவர் தருமரால் துரியோதனனிடம் தூதாகச் சென்றவர்.

**"சீருலூகனைத் தூதுசென்றிவர் மனஞ்செப்பிமீள் கெனப்போக்கி**
**ஒருலூகமுடன் தவழ்ந்தவன் நனதூர்புகுந்தன னன்றே"**
**(உத்-கி-பா.5)**

உலூகமுனிவர் அஸ்தினாபுரி சென்று தூதுரைத்தார். எனினும் துரியோதனன் ஆட்சிப்பொறுப்பைக் கொடுக்கவில்லை.

### சஞ்சயன் தூது

சுயநல நோக்கத்தோடு திருதராஷ்டிர மன்னரால் அனுப்பப்பெற்ற இரண்டாம் தூதுவன் சஞ்சயன் ஆகும். நாடிழந்து உரிமை வேண்டி நிற்பவர்களைத் துறவு மேற்கொள்ளுங்கள் எனத் தூது அனுப்பியமை இதில் விந்தையானது. மூன்றாம் தூதாக கிருஷ்ணன் தூது அமைந்திருக்கிறது.

### கிருஷ்ணன் தூது

தருமர் கிருஷ்ணனிடம் முனிவருக்கு நாம் சொன்ன செய்தியையும், முன்பு உலூக முனிவரிடம் நாம் தூது சொன்ன செய்தியையும் அறிவாய். விஷத்தை அதிகமாக உண்ட பின்பு, அவ்விஷத்தை ஒழிக்கக்கூடிய சிறந்த மருந்துகளையும் மந்திரத்தையும் தேடாமல் இருப்பது சரியில்லை. நாம் அடுத்த முயற்சி எடுக்கவேண்டும் என்று கூறி நாங்கள் எல்லோரும் சமாதானமாகக் கூடி குருதேசத்தில் வாழ்வதற்காகவும் நீ அவர்களிடம் தூது சென்று அருள்வாய் என்று கேட்கும் சூழலே கிருஷ்ணன் தூதின் ஆரம்ப நிலையாகும்.

**"மன்னவர்க்கு மாமன்னவன் பான் மாயோனுந் தூதாகிப்**
**பொன்னுற்ற நேமிப் பொரு பரிந்தோர் மேற்கொண்டான்"**
**(உத்-கி-பா.113)**

தரும அரசர் வேண்டுகோளுக்கிணங்க, துரியோதனனிடம் கிருஷ்ணன் தூது சென்ற சிறப்பான நிலை அறியப்படுகிறது.

**தூதுப்பொருளை ஆராய்தல்**

கிருஷ்ணன் தன் கடமையை உணர்ந்து, தூது செல்ல வேண்டியவற்றை முறையாகக் கணக்கிட பாண்டவர் ஐவரின் மனநிலையையும், திரௌபதியின் மன நிலையையும் அறிய முற்படுகிறான். இதனையே,

> **“தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**
>
> **நன்றி பயப்பதாம் தூது” (குறள் - 685)**

என்று வள்ளுவரும் தூது அதிகாரத்தில் எடுத்துரைக்கிறார்.

தருமரின் எண்ணமோ, சமாதானப்படி முழு இராஜ்ஜியம் வேண்டுதல் இல்லையெனில் ஐவருக்கும் ஐந்து பகுதிகள் அதுவும் இல்லையெனில் ஐந்து வீடுகள் பெறும் நிலையாக இருந்தது. துரியோதனனை வென்று, பாஞ்சாலிக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்க வேண்டுமே தவிர, தூதாக யாசித்து இராஜ்ஜியம் பெறுதல் நன்றன்று என்பது பீமனின் எண்ணம். மனைவியைக் காப்பாற்றாமல் நின்ற குற்றத்திற்குப் பரிகாரம் தேடவேண்டும், போரில் எதிர்ப்பவர்களின் உயிரைக் குடிப்பதற்காக என் கையிலுள்ள அம்பு தயாராக இருக்கின்றது என்று அர்ச்சுனன் கூறுகையில், அர்ச்சுனனும் போரை விரும்புகிறான் என்பதைக் கிருஷ்ணன் தெரிந்து கொள்கிறான். புரூரவச் சக்கரவர்த்தி தேவேந்திரனுக்காக ஊர்வசியை அரசர்களிடமிருந்து போர் செய்து விடுவித்துத் தந்தது போல போர் செய்தே பாஞ்சாலி விரிந்த தன் கூந்தலை அலங்கரிக்கும்படி செய்யவேண்டும் என்று நகுலனும் கூறினான்.

கிருஷ்ணன் சகாதேவனிடம் பாரதப்போர் நடக்காமல் இருப்பதற்கு உன்விருப்பம் என்னவென்று கேட்கிறான். சகாதேவன் அதற்கு, கர்ணன் புவியை அரசாட்சி செய்யவும், அர்சசுனன் இறந்து படவும், சிறந்த மகளான திரௌபதியின் கருநிறம் பொருந்திய கூந்தலை அரிந்து விடவும், கால்களிலே விலங்கையிட்டுக் கைகளையும் பிடித்து உன்னையும் நான் தகுதியாகக் கட்டிவைத்தேனானால் பெரிய பாரதப்போர் நடந்திடாதபடி தடுத்திடலாம் என்று கூறியதை,

> **“பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்**
> **காரார் குழல்களைந்து காலிற் றளையூட்டி**
> **நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்**
> **வாராமற் காக்கலா மா பாரதமென்றான்”**
> **(உத்-கி-பா.95)**

என்ற பாரதவரிகள் மெய்ப்பிக்கின்றன. விசித்திர சக்தியை உடையவனுமான கிருஷ்ணன் மிக்க பக்தியுடையவனான சகாதேவனது கருத்து நிலையை அறிய கர்ணனை அரசாள்வித்தல், அர்ச்சுனனைக் கொல்லுதல், திரௌபதியின் குழலைக்களைதல் இவைகள் நடந்தாலும் என்னை எவ்வாறு கட்டுவிப்பாய் என்று கேட்டு ஆயவடிவம் பதினாறாயிரம் எடுத்துக் கொண்டான். சகாதேவனும் அவ்வடிவங்கட்கெல்லாம் முதன்மையான திருவுருவத்தை அறிந்து, தனது மனமாகிய கயிற்றினால் கட்டினான். கிருஷ்ணன்

சகாதேவன் அன்பின்முன் தோற்று கட்டவிழ்க்குமாறு கூறிவிட்டு, கிருஷ்ணன் வடிவத்தில் காட்சியளித்தான். கிருஷ்ணன் சகாதேவனது பக்தியை உணர்ந்திருந்தும் சோதித்து அவ்வின்பத்தைத் தான் அனுபவித்து மகிழவும், சகாதேவனுக்கு ஓர் சிறப்பை அளிக்கவும் கிருஷ்ணன் இவ்விதமாக சோதித்துப் பார்த்தான்.

தருமரைத் தவிர மற்றவர்கள் போரிடத் தயாராக இருந்தும் அவர்களைச் சமாதானம் செய்து தருமர் எண்ணப்படி துரியோதனனிடம் சமாதானத்தூது சென்று அது முடியாமல் போகக் கிருஷ்ணர் போர் செய்வதற்கு நாள் குறித்துப் போரில் பாண்டவர்கள் வெற்றி பெறுவதற்குரிய அனைத்துச் செயல்களையும் செய்துவிட்டு தூதின் வெற்றியை அடைந்தார். சமாதானம் நல்ல செயலாக இருந்தாலும் துரியோதனன் அழிவை எண்ணும்போது சமாதானத்தை நீக்கிப் போர் மேற்கொள்வதே சிறந்தது என்று கிருஷ்ணன் ஆராய்ந்து செயல்பட்டநிலையை அறிய முடிகிறது.

**தானே தூதாகி வந்தநிலை**

துரியோதனனிடம் பாண்டவர்களுக்காகத் தூது செல்ல கிருஷ்ணன் புறப்பட்டு அஸ்தினாபுரத்தின் தென்புறத்துச் சோலையில் தங்கினான். அரண்மனையிலுள்ள துரியோதனனிடம், அவன் தூதுவன் சென்று **'அன்று தூது கொண்டு இலங்கைத் தீ விளைத்தவர் இன்று ஐவர்க்குந் தூதுவந்து எயிற்புறத்து இறுத்தனர்'** என்று கூறினான். முன்பு ஸ்ரீராம அவதாரம் எடுத்த காலத்தில் தமது தூதனாகிய அனுமனால் இராவணனது இலங்கையை நெருப்பு பற்றவைத்தருளிய கிருஷ்ணர் இன்று பஞ்சபாண்டவர்களின் பொருட்டுத் தூதாகி வந்ததனால், நம் நாட்டுக்குப் பெரும் அழிவு ஏற்படும் அபாயம் உள்ளது என்று துரியோதனனிடம் தூதுவன் அச்சம் கொண்டு தூது உரைத்தான். தூது உரைப்பதற்கு முன்னரே பகை நாட்டில் அச்சத்தை உருவாக்கிய கிருஷ்ணனின் அறிவுத்திறன் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

**துரோக நிலை**

மனிதன், நாகரிகம் அடைந்த காலத்திலிருந்தே தூதுக்கு மதிப்புக் கொடுத்து வாழ்ந்து வருகிறான். வேற்றுநாட்டு மன்னரிடம் வேறுநாட்டைச் சேர்ந்த ஒருவர் தூதுவனாக வந்தால், அவனை அவமானப்படுத்துவதும், மதிப்புக்கொடுக்காமல் அவமதிப்புச் செய்வதும், சிறைப்படுத்துவதும் துரோகமாகும்.

மகாபாரதத்திலும் தூதாக வந்த கிருஷ்ணனைத் துரியோதனன் சகுனியின் ஆலோசனையுடன் கொல்ல முயல்வதும், சிறைப்படுத்தச் சூழ்ச்சி செய்வதும் துரோகச் செயலாகவே கருதப்படுகிறது. தூதரைக் கொல்லுவது நல்ல அரசருக்குத் தக்க செயலன்று என்பதை அறிந்திருந்தும் துரியோதனன் சூழ்ச்சி செய்து, கிருஷ்ணனைக் கொலைசெய்ய முயற்சித்தான்.

**"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது"** (குறள்-690)

அழிவே வருவதாயினும் அஞ்சாது தன்னுடைய அரசனுக்கு நன்மை உண்டாகக் கூடியவற்றைச் செய்வதே தூது என்று வள்ளுவர் கூறியதற்கு ஏற்றவாறு கிருஷ்ணன், துரியோதனன் தன்னை அழிக்க முயற்சி செய்கிறான் என்று தெரிந்திருந்தும் தூது செல்லத் தயாராக இருந்தமை சுட்டப்ப்படுகிறது.

துரியோதனன், தூதுவனாக வந்த கிருஷ்ணனைக் குறிப்பிட்ட ஓர் ஆசனத்தில் அமரச் செய்தான். மூங்கில் பிளாச்சிகள் முறிந்து கிருஷ்ணன் ஆசனத்தோடு நிலவறைக்குள் விழுந்தான். துரியோதனன் செய்த சூழ்ச்சியைக் கிருஷ்ணன் அக்கணமே நெஞ்சில் மூண்டெழுந்த கோபத்தோடு தனது திருவடி பாதாளத்தில் செல்லவும், தனது திருமுடி ஆகாயத்தில் செல்லவும் விசுவரூபம் எடுத்து, அதைக்கண்டு தேவர்களும் பாதாளலோக நாகசாதியர்களும் நடுங்கும்படி செய்தான். பின்னர் பீஷ்மர், துரோணர், விதுரன் போன்றோரின் வேண்டுகோளுக்கிணங்கி, சாந்தமான நிலையை அடைந்தான். பின்னர் உனது வம்சம் முழுவதும் அழியும்படி எதிர்த்துப்போர் செய்து, ஒரு நொடிப்பொழுதினுள்ளே கொடிய யுத்தத்தில் பொடியாக்குவேன். உன்னையும், உனக்குத் துணையாக வருபவரையும் இப்பொழுதே, நான் கொல்லாமைக்குக் காரணம் ஆற்றல் இல்லாமல் இல்லை. பாண்டவர்கள் வார்த்தை பொய்த்துப் போய்விடக்கூடாது என்பதற்காக என்றுகூறித் தூதராக வீரவார்த்தை சொல்லி, சபையைவிட்டு கிருஷ்ணர் வெளியேறிய நிலையினை,

**“ஒல்லையினின் குலமுற்று மடிந்திடவுற்று மலைந்தொர்கணத்**

**தெல்லையின் வெஞ்சமர்நூறுவன் யாவருமேருவர் வானுலகே”**

**(உத்-கி-பா.215)**

என்று வில்லிபாரதவரிகள் எடுத்துரைக்கின்றன.

**தூதுவனின் பண்புகள்**

அன்புடைமையும், அறிவுடைமையும், ஆராய்ந்து சொல்கின்ற சொல்திறமையும் தூது உரைப்பவனுக்கு இருக்க வேண்டிய மூன்று பண்புகள் என்பதனை,

**“அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பவர்க்கு**

**இன்றி அமையாத மூன்று” (குறள்.682)**

என்ற குறள்மூலம் வள்ளுவர் எடுத்துரைக்கிறார். இம்மூன்று பண்புகளும் கிருஷ்ணனுக்கு அமைந்திருக்கின்றது என்பதை ஒவ்வொரு நிகழ்வுகள் மூலமும் ஆராயலாம்.

**அன்புடைமை**

கிருஷ்ணன் அஸ்தினாபுரத்திற்கு வந்ததும் அமோகமான வரவேற்பு கிடைத்தது. கிருஷ்ணன் முதலில் திருதராஷ்டிர மன்னன் மாளிகைக்குச் சென்று, அவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் பின்பு விதுரனுடைய வீட்டிற்குச் சென்றமை இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது. வள்ளுவர் தூதுவனுக்கு அன்புடைமையும் சிறந்த குணமென்பதை,

**“அன்புஉடைமை ஆன்றகுடிப்பிறத்தல் வேந்து அவாம்**

**பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு” (குறள்-681)**

என்ற குறளில் விளக்கியுள்ளார். பாண்டவர்களின் மீது கொண்ட அன்பினால் தூது சென்றநிலை, விதுரன் வீட்டில்தங்கி அருள்புரிந்த அன்புநிலை, தூது சென்றபோது திருதராஷ்டிரரை வணங்கிய மரியாதை கலந்த அன்புநிலை இவையனைத்தும் வள்ளுவர் கூறிய அன்புக் குணம் கிருஷ்ணனிடமும் உள்ளது என்பதை எடுத்துரைக்கிறது.

விதுரன் பரமபாகவதன் ஆதலாலும், பாண்டவர்கள் மீது பிரியமுடையவனாதலாலும் கிருஷ்ணன் அவர் மனைக்கே சென்றான். கிருஷ்ணனது பஞ்ச பிராணன்களையொத்த, பஞ்ச பாண்டவர்களுக்குத் துரியோதனன் பகைவனாதலால், அரண்மனைக்குச் செல்லவில்லை என்பதை,

**“பைந்துழாய் முடிப்பரம னுங்கண் மலர்பரப்பி**
**அந்தமா நகர்புகுந்த பிரைசனிற் புகாமற்**
**புந்திகூரருள் விதுரன் வாழ்வளமனை புகுந்தான்”**
**(உத்-கி-பா.135)**

என்று வில்லிபாரதவரிகள் குறிப்பிடுகின்றன. தூதுவனாக வந்த காரணத்தினாலும் வந்த காரியம் நிறைவேறாமல் உணவு உண்ணக்கூடாது என்பதும் கிருஷ்ணனுடைய கொள்கையாக இருந்தது. கிருஷ்ணன் அரண்மனைக்கு வராமைக்குக் காரணம் என்னவென்று துரியோதனன் விதுரனிடம் கேட்டதற்கு ஆடம்பரங்களுக்குக் கிருஷ்ணன் கட்டுப்படமாட்டான், பாண்டவர்களுக்குச் செய்துள்ள பாதகங்களுக்கு நிவர்த்தி தேடுவதே கிருஷ்ணன் வருகையின் நோக்கம் என்று கூறினான். அரண்மனைக்கு வராத கிருஷ்ணனை ஏன் உன் வீட்டிற்குள் அனுமதித்தாய் என்று துரியோதனன் இழிவாகப் பேச விதுரன் அதைக் கேட்டு கோபம் கொண்டு பாரதப்போரில் நான் யார் பக்கமும் நின்று கொடிய அம்பைத் (சிவ விஷ்ணு தனுசு) தொடுக்கமாட்டேன் என்று இரண்டு துண்டாகும்படி, வெட்டி எறிந்தான்.

இந்நிகழ்வு நடந்தபின் அர்ச்சுனன் காண்டீப வில்லை வைத்து, போரிடும் போது, அவனுக்கு இணையாக போரிட எவரும் இல்லை என்று கிருஷ்ணன் திருப்தி அடைந்த நிலை அறியப்படுகிறது. மேலும் துரியோதனனுக்கு விதுரனிடத்தில் வெகுளியையும், விதுரனுக்குத் துரியோதனனிடத்தில் வெறுப்பையும் உண்டாக்குவதற்காகவே தூதுவன் கிருஷ்ணன் சாதுர்யமாக விதுரன் வீட்டிற்குச் சென்றுள்ள நிலையும் கிருஷ்ணனின் அன்புநிலையும் புலப்படுகின்றது.

**வினைக்கேற்ற அறிவுடைமை**

தூதுவன் காலம் அறிந்து செயல்பட வேண்டும். கிருஷ்ணன் காலநிலையைப் பயன்படுத்தி அசுவத்தாமன் துரியோதனன் நட்பில் விரிசலை உண்டாக்கிய திறம் எடுத்துரைக்கப்படுகிறது. கிருஷ்ணன் அசுவத்தாமனை நோக்கி, பாண்டவர்களுக்காகத் தூது வந்த நான் துரியோதனனிடம் அவர்களுக்காக ஐந்து ஊர்களையாவது கொடு என்று கேட்டேன் அவன் மறுத்துவிட்டான். இனி வரும் யுத்தகளத்தில் இதற்கு நீயே சாட்சி! என்று அசுவத்தாமனிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தான். அச்சூழலில் கிருஷ்ணன் தனது கைவிரல் மோதிரத்தைத் தானாகவே கழன்று விழுவதுபோல் தரையில் நழுவவிட அதுகண்ட அசுவத்தாமன் அந்த ரத்தினமோதிரத்தை எடுத்து கிருஷ்ணனிடம் நீட்ட அதை வாங்காமல் அசுவத்தாமா அதோ ஆகாயத்தில் சூரியனை மண்டலம் சூழ்ந்துகொண்டதைப் பார் என்று மனத்தைத்

திசை திருப்ப அசுவத்தாமனும் மோதிரத்தைக் கிருஷ்ணனிடம் நீட்டிக் கொண்டே ஆகாயத்தைப் பார்த்த காட்சியினை,

**“ஆயோதனத் திலடலரியே றனையான் றன்னையிவ்வாறு**
**மாயோனுரைத்துத்தன்விரலின் மணியாழியைமண்ணிடைவீழ்த்**
**தான்சேயோனதனையெடுத்தவன்றன் செங்கைகொடுக்கவாங்காமற்**
**றூயோயூர்கோள் பரிதிதனைச் சூழ்ந்தகல்வான் மீதென்றே”-**

**(உத்-கி-பா-286)**

என்ற வில்லிபாரத வரிகள் வர்ணிக்கின்றன. இந்நிகழ்வினை தூரத்திலிருந்து பார்த்த துரியோதனனுக்குக் கிருஷ்ணன் அசுவத்தாமனைக் கூப்பிட்ட செய்தியும் அசுவத்தாமன் பூமியிலிருந்து மோதிரத்தை எடுத்துத் தந்ததும் தெரியாத காரணத்தினால் அசுவத்தாமன் மீது சந்தேகப்பட்டு கோபம் கொண்டான். அசுவத்தாமன் உண்மையைக் கூறியும் துரியோதனனால் ஏற்க முடியவில்லை. இவ்விருவருக்குமிடையே பிரிவை ஏற்படுத்திக் கிருஷ்ணன் தனது அறிவுடைமையால் வெற்றி பெற்றதை உணரமுடிகின்றது. துரியோதனன் சமாதானமாகப் போக மறுத்த பிறகு, போரில் வெற்றிபெற என்ன செய்ய வேண்டுமென்று கிருஷ்ணன் திட்டமிட்டு, வில்லாளி விதுரனிடம் துரியோதனனுக்குக் கோபம் உண்டாகச்செய்தும், அசுவத்தாமன் நட்பில் விரிசலை ஏற்படுத்தியும் தனது கடமையைச் செய்ய முயன்ற விதம் நன்கு அறியப்படுகின்றது.

**ஆராய்ந்த சொல்வன்மை**

**தன்வயப்படுத்துதல்**

ஆராய்ந்து சொல்கின்ற சொல்திறமையும், சொல்ல வேண்டியவற்றைப் பிறர் கருத்தில் பதியுமாறு சொல்லும் திறனும் தூது உரைப்பவனுக்குரிய பண்புகளாகும். கிருஷ்ணன் இந்திரனை அழைத்துப் போர் நடப்பது உறுதி. போரில் கர்ணனால் அர்ச்சுனன் இறக்கும் சூழல் ஏற்படும். அவ்வாறு அர்ச்சுனன் இறந்தால் அவனது தந்தையாகிய உனக்கே என்றும் அழியாத பழி நிச்சயம் ஏற்பட்டுவிடும். அதனால் கர்ணனின் கவசகுண்டலங்களைத் தானமாகப் பெற்றுவிடு என்று யோசனைக்கூறி, இந்திரனைத் தந்திரமாகத் தன் வழிப்படுத்திய சூழலில் கிருஷ்ணனின் சொல்திறன் அறியப்படுகின்றது.

இந்திரன் கிருஷ்ணன் பேசியதை எண்ணிப்பார்த்துக் கிழவனாக வேடம்தரித்து கர்ணனிடம் கவசத்தையும், குண்டலங்களையும் கேட்க இது கிருஷ்ணனின் சூழ்ச்சி என்று அறிந்திருந்தும் கலக்கமில்லாமல் கர்ணன் கவசகுண்டலங்களைத் தானமாக அளிக்கும் விதத்தினை,

**“வந்த வந்தணன் கவசகுண்டலங்களை வாங்கிநீ வழங்கெனக்**
**கென்னத் தந்தனன்பெறுகென அவன்வழங்க விண்டலத்திலோர்**
**தனியசரீரி யிந்தரன்றனை விரனினான் மாயவனே”**

**(உத்-கி-பா.302)**

என்று கிருஷ்ணன் தூதுச் சருக்க பாடல்வரிகள் விளக்குகின்றன. கர்ணனின் கொடைச்சிறப்பைக் கண்டுவியந்து, இந்திரன் பீமன் மகனாகிய கடோத்கசனைக் கொல்லும் சக்தி கொண்ட வேல் ஒன்றை அவனுக்கு வழங்கினான். கர்ணன் கவசகுண்டலங்களை இழந்ததை இந்திரன் வாயிலாகக் கிருஷ்ணன் அறிந்ததும் துரியோதனனுக்குப் பாரதப்போரில் வெற்றி வாய்ப்பு குறைந்து கொண்டே வருகிறது என்பதையும் உறுதிசெய்தான்.

**எதிர்மறை சிந்தனை**

கிருஷ்ணன் கர்ணனிடம் நீ குந்திதேவியின் மகன் என்றுகூறித் தருமனிடம் சேர்ந்துவிடு என்றுகூற, கர்ணன் அவ்வாறு சேருவது, 'செயந்நன்றி கொல்வதாகும்' எனக்கூறி மறுத்துவிட்டான். கர்ணன் தருமனிடம் சேரக்கூடாது என்பதே கிருஷ்ணனின் உள்நோக்கமாகும். கர்ணனை நம்பித்தான் துரியோதனன் போருக்கு உடன்பாடு தெரிவித்தான். கர்ணன் தருமனிடம் சேர்ந்துவிட்டால் துரியோதனன் போருக்கு உடன்படமாட்டான். ஆகவே அவனை அழிக்க வாய்ப்பு இல்லை என்று கருதி, தருமனுடன் கர்ணன் சேரலாகாது என்பதைக் கர்ணன் வாயிலாகவே கிருஷ்ணன் உறுதிப்படுத்திக் கொண்ட நிலை சிறப்பு வாய்ந்தது.

**கிருஷ்ணன் குந்திதேவி சந்திப்பு**

கிருஷ்ணன் குந்தியை அழைத்து கர்ணனது பிறப்பின் வரலாற்றைக் கூறி, பாண்டவர்கள் வெற்றிபெற, கர்ணனிடம் நாகாஸ்திரத்தை அருச்சுனனுக்கு எதிராக ஒரு தடவைக்கு மேல் பயன்படுத்தக்கூடாது என்றும், மற்ற நால்வர் மீது பகை பாராட்டக்கூடாது என்றும் வரம்பெற்று வரச்செய்தான். குந்திதேவியும் கர்ணனிடம் சென்று, உன் தாய் நான் தான் என்று கூற கிருஷ்ணன் சூழ்ச்சியோ என்று மறுத்துவிட்டான். பல தாய்மார்கள் செல்வம் பறிக்கப் பொய் கூறினார்கள். தேவர்கள் அளித்த ஆடையை அணிந்து உண்மையைக் கூறுங்கள், நீங்கள் உண்மையான தாயாக இருந்தால் உயிர் பிரியாது. இல்லையெனில் மரண வேதனையில் உயிர் பிரிந்துவிடும் என்று கூறினான். குந்திதேவி ஆடையை அணிந்து உண்மையான தாய் என்று நிரூபிக்க, கர்ணன் பாச வெள்ளத்தில் மூழ்கிப் போனான். குந்திதேவி கர்ணனிடம் பாண்டவர்கள் உன் தம்பிமார்கள் போர் வேண்டாம் என்று கூறியும் அவன் கேட்கவில்லை. கிருஷ்ணன் கூறிய பின்பு, இரண்டு வரங்களைக் குந்திதேவி கேட்ட விதத்தினை,

> **"பார்த்தன் வெஞ்சமரின்னுடன் மலைத்தாற் பகைப்பெரும்பாதி**
> **தளம்பகழி கோத்தலும் பிழைத்தான் மறித்துநீ விடுத்துக்கோற**
> **லென்றொருவரங்குறித்தாள் வாய்த்தமற்றவர்களிளைஞரென்றவரை**
> **மலையலென்றொரு வரங் குறித்தான்"**
>
> **(உத்-கி-பா.318)**

கர்ணன் தாய் கேட்ட வரங்களைக் கொடுத்து, தான் பாரதப்போரில் அர்ச்சுனனால் இறக்க நேரிடலாம். அவ்வாறு நேரிட்டால், அரசர்கள் அனைவரும் அறியும்படி உம்முடைய புத்திரன் நான் என்று கூறவேண்டும் அதன்பின் பாரதப்போர் நடைபெறும் வரை பாண்டவர்கள் ஐவருக்கும் நான் உனது புத்திரன் என்பதும் தெரியக்கூடாது என்று கேட்ட குந்திதேவி சரி என்று கூறிவிட்டு பாசப்போராட்டத்தில்

திளைத்துக் கிருஷ்ணன் கூறியவற்றைச் செம்மையாகச் செய்து முடித்தாள். இவ்வாறு கிருஷ்ணன் பாரதப்போரில் வெற்றிப் பெறக்கூடிய அனைத்துச் செயல்களையும் ஆராய்ந்து செய்தமை வியப்பிற்குரியது.

**முடிவுரை**

பாண்டவர்களுக்காகக் கிருஷ்ணன் தூது சென்று விதுரர் வீட்டில் தங்கி நடுநிலையாளர் வீட்டில் தான் தூதர்கள் தங்குதல் முறைமை என்று கூறியது தூதனின் சிறப்பம்சமாகத் திகழ்கிறது. தூதரை எவரும் அவமதியார் என்ற முறை அறிந்தும் சகுனியின் சூழ்ச்சிக்கேற்ப துரியோதனன் கிருஷ்ணனை அழிக்க முயன்றமைத் தூதருக்குச் செய்யும் துரோகமாகும்.

கிருஷ்ணன் தூதால் பாண்டவர்கள் நாடு பெறவில்லை எனினும் கிருஷ்ணன் போருக்கு நாளும் குறித்து, அதற்கு முன்னேற்பாடாகச் சில செயல்களையும் செய்தமை தூதனின் கடைமையாகக் கருதப்படுகிறது. கிருஷ்ணன், விதுரர் வீட்டில் தங்கி துரியோதனன் விதுரனை இழிவாக பேசும்படி செய்து, துரியோதனன் பேசிய இழிவான வார்த்தைகளைக் கேட்டு கோபத்தில் வில்லை முறித்துப் போரில் கலந்துகொள்ள மாட்டேன் என்று விதுரரையும் கூறவைத்த விதம் சிறப்பாகும். விதுரர் போரில் கலந்துகொண்டால் பாண்டவர்களுக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கும், அதைத் தடுக்கவே கிருஷ்ணன் செய்த சூழ்ச்சியாகும். கிருஷ்ணன் அசுவத்தாமனுடன் உரையாடித் துரியோதனன் அசுவத்தாமன் இடையே பிரிவை ஏற்படுத்தி, அசுவத்தாமனுக்குத் துரியோதனன் படைத்தலைமை அளிக்காதவாறு கிருஷ்ணன் சாதுர்யமாகச் செயல்பட்டதை அறியமுடிகிறது.

கர்ணனிடம் அவனது பிறப்பைக்கூறி, தருமனிடம் சேரும்படிக் கிருஷ்ணன் கேட்டு, கர்ணன் மறுக்க போர் உறுதி, துரியோதனன் அழிவும் உறுதி எனக் கிருஷ்ணன் கர்ணன் வாயிலாகவே அறிந்தவிதம் புலப்படுகிறது. இந்திரனை அனுப்பி கவசகுண்டலங்களையும் குந்திதேவியை அனுப்பி நாகாஸ்திரத்தையும் கர்ணனிடம் இருந்து பறித்து அவனைப் பலமில்லாதவனாக்கிக் கிருஷ்ணன் திட்டமிட்டு செயல்பட்ட விதமும் அறியப்படுகின்றது. கிருஷ்ணன் தூது சென்றான் என்பதைவிட போர்க்குரிய ஆயத்தங்களையும் வெற்றிக்குரிய களங்களையும் செய்தான் என்பது சாலச்சிறந்தது. கிருஷ்ணன் தூதின் முடிவே பாரதப்போர். பாண்டவர்பொருட்டு இறைவனாகிய கிருஷ்ணனே தூது சென்றது வெற்றிக்கு அடையாளமாகக் கருதப்படுகின்றது.

**சான்றாதார நூல்கள்**


1. வில்லிபாரதம்-வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார். உமா பதிப்பகம், சென்னை.
2. தொல்காப்பியம்-முனைவர் ச.வே.சுப்பிரமணியன், 8/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
3. திருக்குறள்-பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.